மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

10. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)

தமிழ்நாடு தனியார் கல்வி நிலையங்கள் உள்ளடங்கலான கல்வி நிலையங்களில் இடங்களையும் அரசின் கீழ்வரும் பணிகளில் நியமனங்கள் அல்லது பதவிகளையும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள் மற்றும் சீர்மரபினர்களுக்கான இடஒதுக்கீட்டிற்குள்ளாக தனி ஒதுக்கீடு செய்தல் சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்). 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் கல்வி நிலையங்கள் உள்ளடங்கலான கல்வி நிலையங்களில் இடங்களையும் அரசின் கீழ்வரும் பணிகளில் நியமனங்கள் அல்லது பதவிகளையும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள் மற்றும் சீர்மரபினர்களுக்கான இடஒதுக்கீட்டிற்குள்ளாக தனி ஒதுக்கீடு செய்தல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2021), மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் கல்வி நிலையங்கள் உள்ளடங்கலான கல்வி நிலையங்களில் இடங்களையும் அரசின் கீழ்வரும் பணிகளில் நியமனங்கள் அல்லது பதவிகளையும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள் மற்றும் சீர்மரபினர்களுக்கான இடஒதுக்கீட்டிற்குள்ளாக தனி ஒதுக்கீடு செய்தல் சட்டமுன்வடிவு

2021 பிப்ரவரி 26] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

(சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2021) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏதாவது விளக்கம் சொல்ல வேண்டுமென்றால், சொல்லலாம்.*

பிற்பகல் 3–50

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1985 ஆம் ஆண்டில் திரு. ஜே.ஏ. அம்பாசங்கர், I.A.S. (ஓய்வு) அவர்களின் தலைமையில் தமிழ்நாடு இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் அமைக்கப்பட்டது. இந்த ஆணையம், தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள் மற்றும் சீர்மரபினர்களின் மக்கள் தொகையை மதிப்பிட்டு, தமிழ்நாட்டில் அப்போதிருந்த அனைத்து பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என வகைப்படுத்தப்பட்ட சாதிகள் மற்றும் சமூகங்களின் பின்தங்கிய நிலையைக் கண்டறிய ஒரு கணக்கெடுப்பு நடத்தியது.*

1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள், பட்டியல் சாதியினர்கள் மற்றும் பட்டியல் பழங்குடியினர்கள் (கல்வி நிலையங்களில் இடங்கள் மற்றும் அரசின்கீழ் வருகின்ற பணிகளில் நியமனங்களை அல்லது பதவிகளை ஒதுக்கீடு செய்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 45/1994)கீழ் தனியார் கல்வி நிலையங்கள் உள்ளடங்கலான கல்வி நிலையங்களில் மாணவர் சேர்க்கையிலும், அரசின் கீழ்வரும் பணிகளில் பதவிகளிலும் மற்றும் நியமனங்களிலும், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள் மற்றும் சீர்மரபினருக்காக முறையே 30% மற்றும் 20% இட ஒதுக்கீடு வழங்கி தற்போது பயன்படுத்தி வருகின்றனர்.

மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள் மற்றும் சீர்மரபினர், பிற சாதியினர் மற்றும் சமூகத்தினருடன் ஒருவருக்கொருவர்

@ 26-2-2021 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

போட்டியிட்டு, அவர்களுக்கு உரிய விகிதாச்சார ஒதுக்கீட்டின் பலன்களைப் பெற இயலவில்லை என்பதால், கல்வி நிலையங்களில் மாணவர் சேர்க்கையில் மற்றும் அரசின் கீழ்வரும் பணிகளில் நியமனங்கள் அல்லது பதவிகளில் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரைச் சார்ந்த வன்னியகுல சத்திரியர்களுக்கு தனிப்பட்ட உள் ஒதுக்கீடு வழங்குவதற்காக அவர்களிடமிருந்து தொடர்ந்து கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன. பிற்படுத்தப்பட்டோருக்கான ஒதுக்கீட்டில் சாதிகளுக்கான உள் ஒதுக்கீடு வழங்குவது சம்பந்தமாக மாண்புமிகு அம்மா அவர்கள் 2012 ஆம் ஆண்டே, அரசாணை எண் 35–ன்படி அமைக்கப்பட்ட மாண்புமிகு திரு. ஜனார்தனம் அவர்கள் தலைமையிலான ஆணையத்திற்கு அனுப்பி, பரிசீலனை செய்து, உள் ஒதுக்கீடு தொடர்பாக அறிக்கை அளிக்குமாறு கேட்டுக்கொண்டார்கள். அவ்வாணையம் இந்தப் பொருள் பற்றி பரிசீலனை செய்து, சமர்ப்பித்த அறிக்கை அரசின் பரிசீலனையில் இருந்துவந்த நிலையில் அந்தப் பரிந்துரையை அடிப்படையாகக்கொண்டு, உரிய சட்டம் இயற்றி நடைமுறைக்குக் கொண்டுவர அரசு கருதியது.

இதனடிப்படையில், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையத் தலைவரும், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள் மற்றும் சீர்மரபினருக்குள் பல்வேறு பிரிவினர்களுக்கான உள் ஒதுக்கீடு வழங்குவதற்காக பல்வேறு சமூகத்தினரால் வைக்கப்பட்ட கோரிக்கையை ஆய்வு செய்து, தமிழ்நாட்டிலுள்ள மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள் மற்றும் சீர்மரபினர் சமூகங்கள் சமச்சீரான வளர்ச்சியைப் பெற்று முன்னேறுவதற்காகவும், கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் அவர்களுக்கு உரிய விகிதாச்சார வாய்ப்பினை பெறுவதற்காகவும், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள் மற்றும் சீர்மரபினருக்குள் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பிரிவில் வன்னியர்களுக்கு 10.5 சதவிகிதமும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் பிரிவில் சில குறிப்பிட்ட ஜாதிப் பிரிவுகளை ஒருங்கிணைத்து அவர்களுக்கு 7 சதவிகிதமும் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பிரிவில் உள்ள மற்ற ஜாதிப் பிரிவுகளுக்கு 2.5 சதவிகிதமும் ஆகிய மூன்று உட்பிரிவுகளுக்கு உள் ஒதுக்கீடு வழங்குவதற்கு, அரசுக்கு தற்போது பரிந்துரை செய்துள்ளார். பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலனுக்கான ஆணையத்தின் மேற்கண்ட பரிந்துரையை ஏற்றுக்கொள்ளவும், அதற்கிணங்க மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சீர்மரபினர் பிரிவினருக்கிடையே

2021 பிப்ரவரி 26] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

விகிதாச்சார அடிப்படையில் உள் ஒதுக்கீடு கொள்கையை நிறைவேற்றவும் மாண்புமிகு அம்மாவின் அரசு தற்போது முடிவு செய்துள்ளது.

இந்தச் சட்டமுன்வடிவு மேற்சொன்ன உள் ஒதுக்கீட்டு முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகின்றது. 2012 ஆம் ஆண்டு திரு. ஜனார்த்தனம் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட ஆணையத்தின் பரிந்துரை அடிப்படையிலேயே இந்தச் சட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு, இந்த ஒதுக்கீடானது தற்காலிகமாக வழங்கப்படுகிறது. இன்னும் ஆறு மாத காலத்திற்குள் சாதிவாரியாகக் கணக்கெடுப்பதற்காக இன்றைக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, அதற்கான ஆணையமும் ஏற்படுத்தப்பட்டு, அந்தப் பணி துவங்கப்பட்டிருக்கிறது. அது ஒவ்வொரு சாதிக்கும் எவ்வளவு பிரதிநிதித்துவம் வழங்கப்படும் என்ற அடிப்படையில் வருகின்றபோது அது அப்போது மாற்றியமைக்கப்படும் என்ற செய்தியினை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு இந்த இட ஒதுக்கீட்டிற்காக அந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள் பல போராட்டங்களை நடத்தியிருக்கிறார்கள். இன்றைக்கு வன்னியர் சமுதாயத்தைச் சேர்ந்த மரியாதைக்குரிய டாக்டர் ஐயா அவர்களும் மற்றும் அந்தச் சமூகத்தைச் சார்ந்தவர்களும் தொடர்ந்து தங்களுக்கு இந்த இட ஒதுக்கீடு கிடைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருந்தார்கள். அதையெல்லாம் கருத்தில் கொண்டுதான் இன்றைக்கு இதை நாங்கள் கொண்டு வந்திருக்கின்றோம் என்ற செய்தியைச் சொல்லி நான் அமைகிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

[பேரவைத் தலைவர்] [2021 பிப்ரவரி 26

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 11 வரை மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 11 வரை மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3–55

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் கல்வி நிலையங்கள் உள்ளடங்கலான கல்வி நிலையங்களில் இடங்களையும் அரசின் கீழ்வரும் பணிகளில் நியமனங்கள் அல்லது பதவிகளையும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள் மற்றும் சீர்மரபினர்களுக்கான இடஒதுக்கீட்டிற்குள்ளாக தனி ஒதுக்கீடு செய்தல் சட்டமுன்வடிவு

2021 பிப்ரவரி 26] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

(சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2021) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

11. மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள் மற்றும் சீர்மரபினர்களுக்கான இட ஒதுக்கீட்டிற்குள்ளாக தனி ஒதுக்கீடு வழங்கிய முதலமைச்சருக்கு பேரவைத் தலைவர் பாராட்டு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் இட ஒதுக்கீடு என்றால் நம் எல்லோர் கண்முன் நிற்பவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டில் கடைபிடிக்கப்பட்டுவரும் 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டிற்கு ஆபத்து வருகிறது என்று தெரிந்தவுடன், தன்னுடைய சாதுர்யத்தால், சாணக்கியத்தனத்தால் அதனை இந்திய அரசமைப்புச் சட்டத்தின் ஒன்பதாவது அட்டவணையில் சேர்த்து அதனைப் பாதுகாத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். 69 விழுக்காடு இட ஒதுக்கீடு இன்றுவரை தமிழ்நாட்டில் கடைபிடிக்கப்பட்டு வருகிறதென்றால் அதற்கு முழுமுதற் காரணம் சமூக நீதிகாத்த வீராங்கனை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

அந்த வரிசையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட